**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No. 98/2026 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 6 |
| Name | : | உமா, வயது 53 |
| Father Name/Husband Name | : | கண்ணன் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of July 2026.

**(Accused absent. 317 CrPC petition filed and allowed).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது கோவில்பட்டி அரசு தலைமை மருத்துமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.03.2024 ஆம் ஆண்டு கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பகுதியில் மூத்த உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது 48 வயதுடைய ரமணன் என்பவர் மாலை 03.50 மணியளவில் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை தனக்கு தெரிந்த ஆண் நபர் ஒருவர் கையால் முகம், தலை மற்றும் தோள் பட்டையில் தாக்கியதாக கூறினார். சம்பவம் நடந்த தினம் 04.03.2024 ஆம் தேதி மதியம் 02.15 மணியளவில் NEC கல்லூரி, Staff cabin ல் வைத்து நடந்ததாக கூறினார்.

2 அவரை பரிசோத்த போது அவர் சுய நினைவுடன் இருந்ததார். நாடி துடிப்பு சீராக இருந்ததது. அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. 3x2 அளவிலான சிராய்பு காயம் வலது புருவத்தின் மேலே காணப்பட்டது.
2. வலி மற்றும் தொடு வலி வலது பக்க முன் நெற்றியில் இருப்பதாக கூறினார்.
3. வலி மற்றும் தொடு வலி வலது பக்க கன்னத்தில் மூக்கின் அருகே இருப்பதாக கூறினார்.

3. நான் மேற்படி நபரின் காயங்களை காயப்பதிவேட்டில் பதிவு செய்து அவரை புறநோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்து சிகிச்சை செய்தேன். மேற்படி நபருக்கு மேற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று காயச்சான்று வழங்கினேன். (**அந்த காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

4. அ.சா.1 ன் காயச்சான்றில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி திருத்தப்பட்டுள்ளதா என்றால் சரிதான், அ.சா.1 யை மருத்துமனைக்கு சிகிச்சைக்கு அன்றைய தினம் வந்ததால் சம்பவம் அன்று நடந்ததாக தவறுதலாக எழுதப்பட்டு பின்பு அன்றைய தினத்திற்கு முதல் நாள் சம்பவம் நடந்ததாக அ.சா.1 சொன்னதால் சம்பவ தேதி திருத்தப்பட்டுள்ளது. அ.சா.1 காலதாமதமாக மருத்துமனைக்கு சிகிச்சைக்கு வந்ததற்கான காரணத்தை உங்களிடம் சொன்னாரா என்றால் சொல்லவில்லை.

5. அ.சா.1 க்கு சிகிச்சை அளிக்கப்பட்ட விவரம் காயச்சான்றில் துலங்கும். அ.சா.1 க்கு TT Septic ஊசி, வலிக்கான ஊசி, வலிக்கான மாத்திரை, சிராய்ப்பு காயத்திற்கான மாத்திரை, Antibiotic ஆகியவை கொடுத்தேன். பொதுவாக இரத்தம் வந்த காயத்திற்கு TT Septic ஊசி போடப்பட்டது. அ.சா.1 க்கு காயம் ஏற்பட்ட பிறகு சுமார் 24 மணி நேரம் கழித்து தான் மருத்துமனைக்கு வந்தார். அ.சா.1 க்கு தலையில், முதுகில், தோள்பட்டையில் காயம் ஏதும் இல்லை என்றால் அ.சா.1 க்கு முன்நெற்றி மற்றும் கன்னத்திலும் தொடு வலி இருந்தது. அ.சா.1 க்கு முதுகு மற்றும் தோள்பட்டையில் காயம் ஏதும் இல்லை. தலை மற்றும் முகம் வெவ்வேறானது என்றால் வெவ்வேறானது என்று இருக்கலாம், தலை மற்றும் முன் நெற்றி என்பது ஒன்றானது.

6. அ.சா.1 க்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் முதலாவது காயம் அவர் தானாக தடுமாறி கீழே விழும்போது ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் கூர்மையான பொருளில் விழும்போது ஏற்பட வாய்ப்பு உண்டு. அ.சா.1 க்கு ஏற்பட்ட தொடு வலி பொய்யானதாக இருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் தொடு வலி பொய்யானது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open
court in the presence of
accused and read over to
the witness and
acknowledged by him/her to
be Correct.

Sd/ Tr. K. Anand, B.A,M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.